ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2453/17 - 2025 සැප්තැම්බර් මස 10 වැනි බදාදා - 2025.09.10
2453/17 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

இங்கு கீழ் i ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகளின் பொதுத்தேவை ஒன்றிற்காக அவசியமாகி உள்ளதனையும். அவை காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதனையும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் அறிவிக்கின்றேன் சேவகத்தின் உரிமை எடுத்தல் எக் காணியினுடையது என்பது ii ஆம் நிரலில் விபரிக்கப்படுகின்றது.

**I. சேவகத்தின் விபரம் :** குண்டசாலை - ஹாரகம நீர் வழங்கல் திட்டத்தின் பிச்சமல் தோட்டத்தின் சேவை நீர்த்தேக்கத்திற்குப் பிரவேசிக்கும் பாதை மற்றும் குழாய்கள் இடுவதற்கான மாற்றுக் காணியின் சேவகத்தின் உரிமையை எடுத்துக் கொள்ளல்.

**II. காணியின் விபரம் :** மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் கண்டி கடவத்சதர கங்கவடகோரளை பிரதேச செயலகத்தில் குருதெனிய மேற்கு (278) கிராம அலுவலர் பிரிவில் கிரிமெடிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2020.10.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட MAHA/MHN/2020/277 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

**01. துண்டு "A" – செட்டிகே தோட்டம் - விஸ்தீரணம்: 0.0767 ஹெக்டயார்**

வடக்கு: க.அ. 320301 இல் காணித் துண்டு இலக்கம் 218, 214 மற்றும் 215; கிழக்கு: க.அ. 320301 இல் காணித் துண்டு இலக்கம் 215, 217, 216, 222, 221, 220, 227, 226, 225, 224, 223 மற்றும் 14; தெற்கு: பாதை (பிரதேச சபை) க. அ. 320301 இல் காணித் துண்டு இலக்கம் 97 மற்றும் 95; மேற்கு: க. அ. 320301 இல் காணித் துண்டு இலக்கம் 95, 94, 93, 92, 218 மற்றும் 214.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இலக்கம் - 4-3/18/2019/WS/623
கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, சனவரி 08.

EOG 09 - 0075

1A - G45327 - 14(2025/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*